**செய்தி வெளியீடு எண்: 085** **நாள்: 02.02.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (2.2.2018) தலைமைச் செயலகத்தில், பள்ளிக் கல்வித் துறையில் பணியாற்றும் மாவட்ட அலுவலர்களின் கள ஆய்வுப் பயன்பாட்டிற்காக 1 கோடியே 92 லட்சம் ரூபாய் செலவில் வாங்கப்பட்ட 32 புதிய ஜீப்புகளை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். மேலும், பொது நூலகத் துறையில் பணியாற்றி பணிக்காலத்தில் காலமான பணியாளர்களின் 20 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

தமிழகத்திலுள்ள ஏழை எளிய மாணவ, மாணவியர் கல்வியில் சிறந்து விளங்கிட, கட்டணமில்லா கல்வி, விலையில்லா பேருந்து பயண அட்டைகள், மிதிவண்டிகள், சீருடைகள், பாடப் புத்தகங்கள், மடிக்கணினிகள், கல்வி உபகரணப் பொருட்கள், உள்ளிட்ட 14 வகையான நலத்திட்டப் பொருட்கள் வழங்குதல், பள்ளிகளின் உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல், மாணாக்கர்கள் தங்குதடையின்றி கல்வி கற்றிட காலியாகவுள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்புதல், பள்ளிக்கல்வித் துறையின் திட்டப் பணிகளை சீரிய முறையில் செயல்படுத்திட ஆசிரியரல்லாத இதர காலிப் பணியிடங்களை நிரப்புதல் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், 2017–18 பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையில், பள்ளிகளை அடிக்கடி ஆய்வு செய்வதற்கும், கல்வித் தரத்தை கண்காணிப்பதற்கும், நிர்வாகப் பணிகளை விரைந்து மேற்கொள்ளவும், பள்ளிக் கல்வித் துறையின் மாவட்ட அலுவலர்களுக்கு புதிய வாகனங்கள் வாங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி, பள்ளிக் கல்வித் துறையில் பணியாற்றும் மாவட்ட அலுவலர்களின் கள ஆய்வுப் பணிகளுக்காக 1 கோடியே 92 லட்சம் ரூபாய் செலவில் வாங்கப்பட்ட 32 புதிய ஜீப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

மேலும், பொது நூலகத் துறையில் பணியாற்றி பணிக்காலத்தில் காலமான அரசுப் பணியாளர்களின் 20 வாரிதாரர்களுக்கு கருணை அடிப்படையில், அவர்களின் கல்வித் தகுதிக்கேற்ப மூன்றாம் நிலை நூலகர், கீழ்நிலை உதவியாளர், பதிவறை எழுத்தர் மற்றும் அலுவலக உதவியாளர் பணியிடங்களுக்கான பணிநியமன ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று வாரிசுதாரர்களுக்கு வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப., பள்ளிக்கல்வித் துறை இயக்குநர் முனைவர் ரெ.இளங்கோவன், பொது நூலகத் துறை இயக்குநர் (பொறுப்பு) முனைவர் வி.சி.இராமேஸ்வரமுருகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**